# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் நாள், செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

<u>**நிகழ்ச்சி நிரல்**</u>

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நான்கு கோட்டப் பகுதிகளில் கட்டிட கழிவுகள் (C&D Waste) சுமார் 50 MT அளவு நாளொன்றுக்கு உற்பத்தியாகிறது. இக்கட்டிட கழிவுகளை அப்புறப்படுத்தி இறுதி தீர்வு காணும் வகையில் C&D கழிவுகளை Collection, Transportation, Processing and Management of C&D Waste திட்டத்தினை DBOT முறையில் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேலும் 2016 திடக்கழிவு மேலாண்மை விதிகளில் கட்டிட இடிபாடு கழிவுகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளின் படியும், இம்மாநகராட்சியில் சேகரமாகும் கட்டிட இடிபாடுகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் கட்டிட இடிபாடுகள் செயலாக்க மையம் அமைக்கும் நோக்கிலும், இத்திட்டத்தினை செயல்படுத்தி வரும் ஆந்திர மாநிலம் விஜயவாடா மாநகராட்சியில் செயல்பட்டுவரும் கட்டிட இடிபாடுகள் செயலாக்க மையத்தை (C&D waste processing plant) உதவி நிர்வாக பொறியாளர் அவர்களால் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு குறிப்புகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், மதுரை மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தனியார் பேவர் பிளாக் நிறுவனங்களை இம்மாநகராட்சியின் நிர்வாக பொறியாளர் மற்றும் உதவி நிர்வாக பொறியாளர் அடங்கிய குழு மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் இம்மாநகராட்சியில் சேகரமாகும் கட்டிட இடிபாடுகளை கொண்டு பேவர் பிளாக்குகளை தயாரிக்க தனியார் நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளது கண்டறியப்பட்டது. மேற்கண்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் நாள்தோறும் 50 டன் கட்டிட இடிபாடுகளை கையாளும் செயலாக்க மையம் அமைக்க உத்தேச செலவினம் ரூ.200.00 லட்சம் ஆகும்.

எனவே இம்மாநகராட்சியில் நாளொன்றுக்கு உருவாகும் 50 டன் கட்டிட கழிவுகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் (C&D waste processing plant) செயலாக்க மையம் அமைக்கும் நோக்கில் Expression of interest (EOI) கோரி ஆர்வமுள்ள நிறுவனத்தினை தேர்வு செய்யவும், விரிவான திட்ட அறிக்கையினை அனுப்பி உரிய நிர்வாக அனுமதியினை, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் பெற்று பணி மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

இம்மாநகராட்சியில் நான்கு கோட்டப் பகுதிகளில் இருந்து சேகரமாகும் கட்டிட கழிவுகளுக்கு (C&D Waste) இறுதி தீர்வு காணும் வகையில் Collection, Transportation, Processing and Management of C&D Waste திட்டத்தினை DBOT முறையில் மேற்கொள்ள Expression of interest (EOI) கோரி ஆர்வமுள்ள நிறுவனத்தினை தேர்வு செய்யவும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை அனுப்புவதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**இ5/4264/19(மையம்)**

**தீர்மானம் எண்.293 (பொருள்– 1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் மற்றும் அரியமங்கலம் கோட்டத்தில் தற்பொழுது நுண்ணுயிர் உரக்கூடங்கள் 15 எண்ணிக்கை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு வார்டுகளில் உள்ள வீடுகளிலிருந்து திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக மேற்கொள்வதற்கு 1000 வீடுகளுக்கு 1 வாகனம் வீதம் கீழ்கண்ட விவரப்படி தேவைப்படுகிறது என ஸ்ரீரங்கம் மற்றும் அரியமங்கலம் கோட்ட உதவி ஆணையர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | Zone | Total no of House holds | Requirement of LCV (1000 H.H / vehicle) | LCV Already provided | Present Requirement LCV (1000 H.H / vehicle) |
|---|---|---|---|---|---|
| 1 | Srirangam | 55067 | 55 | 31 | 24 |
| 2 | Ariyamangalam | 64712 | 53 | 45 | 8 |
| **Total** | | **119779** | **108** | **76** | **32** |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள விவரப்படி கூடுதலாக தேவைப்படும் 32 எண்ணிக்கை புதிய இலகுரக வாகனங்கள் வாங்குவதற்கு வேறொரு கோப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே இப்புதிய வாகனங்கள் வரும் வரை 32 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 85 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட கீழ்கண்ட விவரப்படியான வாடகை விலை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணியினை மேற்கொள்ளலாம்.

| Qty | Description of work | Rate (in Rs) | Per | Amount (in Rs) | Remarks |
|---|---|---|---|---|---|
| 32 Nos x 85 Days | Hire charges (Per day) for LMV Goods vehicle etc., Complete. | 1500.00 | Each & Day | 40,80,000.00 | As per proceedings of the Hire charge fixation committee for the Year 2019-20 R.No.13508/B4/2019. Dt.08.04.2019. |
| 32 Nos x 85 Days | Driver Bata etc. Complete | 550.00 | Each & Day | 14,96,000.00 | |
| 32 Nos x 5 Liter x 85 Days | Diesel (5Liter/Day/vehicle) etc. Complete. | 71.04 (27.05.2019) | Each & Day | 9,66,144.00 | |
| | L.S | | | 856.00 | |
| **Total** | | | | **65,43,000.00** | |

மேற்கண்ட விவரப்படி வீடுகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணியினை 32 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 29.05.2019 முதல் 21.08.2019 வரை 85 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் 2019–20ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வாகன வாடகை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.65,43,000/-க்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. 32 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 85 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் 2019–20ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வாகன வாடகை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.65,43,000/-க்கும் நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு – செலவு திட்ட பொது நிதிக் கணக்குத் தலைப்பு எண் 2305111ல் (திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள் – மனித ஆற்றல் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2500 லட்சத்திலிருந்து மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**இ5/4343/19(மையம்)**

**தீர்மானம் எண்.294 (பொருள்– 2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பொன்மலை மற்றும் கோ.அபிசேகபுரம் கோட்டத்தில் தற்பொழுது நுண்ணுயிர் உரக்கூடங்கள் 16 எண்ணிக்கை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு வார்டுகளில் உள்ள வீடுகளிலிருந்து திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக மேற்கொள்வதற்கு 1000 வீடுகளுக்கு 1 வாகனம் வீதம் கீழ்கண்ட விவரப்படி தேவைப்படுகிறது என பொன்மலை மற்றும் கோ.அபிசேகபுரம் கோட்ட உதவி ஆணையர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | Zone | Total no of House holds | Requirement of LCV (1000 H.H / vehicle) | LCV Already provided | Present Requirement LCV (1000 H.H / vehicle) |
|---|---|---|---|---|---|
| 1 | Ponmalai | 74965 | 68 | 45 | 23 |
| 2 | k.Abishekapuram | 78652 | 73 | 49 | 24 |
| **Total** | | **153617** | **141** | **94** | **47** |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள விவரப்படி கூடுதலாக தேவைப்படும் 47 எண்ணிக்கை புதிய இலகுரக வாகனங்கள் வாங்குவதற்கு வேறொரு கோப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே இப்புதிய வாகனங்கள் வரும் வரை 47 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 85 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட கீழ்கண்ட விவரப்படியான வாடகை விலை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணியினை மேற்கொள்ளலாம்.

| Qty | Description of work | Rate (in Rs) | Per | Amount (in Rs) | Remarks |
|---|---|---|---|---|---|
| 47 Nos x 85 Days | Hire charges (Per day) for LMV Goods vehicle etc., Complete. | 1500.00 | Each & Day | 59,92,500.00 | As per proceedings of the Hire charge fixation committee for the Year 2019-20 R.No.13508/B4/2019. Dt.08.04.2019. |
| 47 Nos x 85 Days | Driver Bata etc. Complete | 550.00 | Each & Day | 21,97,250.00 | |
| 47 Nos x 5Liter x 85 Days | Diesel (5 Liter/Day/vehicle) etc. Complete. | 71.04 (27.05.2019) | Each & Day | 14,19,024.00 | |
| | L.S | | | 226.00 | |
| **Total** | | | | **96,09,000.00** | |

மேற்கண்ட விவரப்படி வீடுகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணியினை 47 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 29.05.2019 முதல் 21.08.2019 வரை 85 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் 2019–20ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வாகன வாடகை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.96,09,000/-க்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. 47 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 85 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் 2019–20ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வாகன வாடகை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.96,09,000/-க்கும் நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு – செலவு திட்ட பொது நிதிக் கணக்குத் தலைப்பு எண் 2305111ல் (திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள் – மனித ஆற்றல் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2500 லட்சத்திலிருந்து மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**இ5/4245/19(மையம்)**

**தீர்மானம் எண்.295 (பொருள்– 3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**